First Semester

# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விப்பீடம்

## பட்டப்பின் படிப்பு கல்வி திப்புளோமாக் கற்கைநெறி – 2016/2017

முதலாம் பருவம்

## CU 502 கல்வியின் உளவியல் அடிப்படைகள்

நேரம்: 30 நிமிடங்கள்

சுட்டிலக்கம்:..............................

பகுதி I

- சகல வினாக்களுக்கும் இத் தாளிலேயே விடை தருக.
- சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

(1) உளவியலின் பல்வேறு அணுகுமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. மனிதனின் ஆழ்மனதினுள் புகுந்து அதன் இயல்புகளைக் கண்டறிந்து அவனது ஆளுமையைத் தீர்மானித்தல்

B. மனிதன் சூழலுடன் இடைவினைத் தொழிற்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு புதிய சூழலொன்றுக்கு தன்னை இயைபாக்கிக் கொள்ளுதல்

C. சூழலின் தூண்டி துலங்கல் பிணைப்பினூடாக மனித நடத்தை தீர்மானிக்கப்படுதல்.

D. சூழலினூடாக கிடைக்கும் அனுபவங்களின் மூலம் பிள்ளையின் அனுபவத்திரளமைப்பு கட்டமைக்கப்பட்டு ஆளுமை விருத்தி இடம்பெறுதல்.

E. மனிதனுள் நடைபெறுகின்ற உயிர்இரசாயன் செயற்பாடுகளினூடாக மனித நடத்தை தீர்மானிக்கப்படுதல்.

இவற்றுள் அறிகைவாதக் கருத்துக்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?

1. A யும் B யும்   2. B யும் D யும்   3. B யும் C யும்   4. C யும் E யும்

(2) மனித நடத்தையை ஆராய்கின்ற உளவியல் ஆய்வு முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. அகநோக்கு ஆய்வுமுறை

B. நெடுங்கோட்டு ஆய்வுமுறை

C. பரிசோதனை ஆய்வுமுறை

D. குறுக்குவெட்டு ஆய்வுமுறை

E. விடய ஆய்வு ஆய்வுமுறை

F. உளப்பகுப்பு ஆய்வுமுறை

இவற்றுள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் குழுக்களைத் தெரிவு செய்து கணித பாடப்பரீட்சையில் சிறப்பாக செயலாற்றிய மாணவர்கள் தொடர்ச்சியான வகுப்புகளில் எவ்வாறு செயலாற்றுகின்றனர் என்பதைத் தீர்மானித்தல் மற்றும் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களின் சித்தியின்மைக்கான காரணங்களைக் கண்டறிதல் ஆகியவற்றைக் கற்பதற்கு பொருத்தமான ஆய்வு முறைகள் முறையே

1. குறுக்குவெட்டு ஆய்வும் விடய ஆய்வும்
2. விடய ஆய்வும் பரிசோதனை ஆய்வும்
3. நெடுங்கோட்டு ஆய்வும் விடய ஆய்வும்
4. நெடுங்கோட்டு ஆய்வும் உளப்பகுப்பு ஆய்வும்

(3) கட்டிளமைப் பருவத்தினரின் விருத்தி பற்றிய பின்வரும் கூற்றுகளுள் பொருத்தமற்றது எது?

1. உடலியல் மற்றும் பாலியல்ரீதியான மாற்றங்களுடன் கட்டிளமைப் பருவம் ஆரம்பமாதல்
2. மனவெழுச்சிரீதியான சமநிலை சகல சந்தர்ப்பங்களிலும் வெளிக்காட்டப்படுதல்
3. கருத்துரீதியாக சிந்திக்கும் ஆற்றல் விருத்தியடைந்திருத்தல்
4. விருத்தியில் பரம்பரை மற்றும் சூழலின் செல்வாக்கு காணப்படுதல்

(4) மக்டூகலின் இயல்பூக்கக் கொள்கையில் முன்வைக்கப்பட்டவாறாக சரியான இயல்பூக்கங்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி பின்வருவனவற்றுள் எது?

A. ஆக்கவூக்கம், போரூக்கம், ஆராய்வூக்கம், திரட்டூக்கம்
B. மகவூக்கம், பாலூாக்கம், அறிவூக்கம், பாதுகாப்பூக்கம்
C. பாலூாக்கம், போரூக்கம், வெறுப்பூக்கம், தன்னிழிவூக்கம்
D. பாலூாக்கம், குழுவூக்கம், அன்பூக்கம், ஆக்கவூக்கம்
E. பாதுகாப்பூக்கம், கணிப்பூக்கம், குழுவூக்கம், மகவூக்கம்
F. மகவூக்கம், குழுவூக்கம், ஒதுங்கலூாக்கம், வெறுப்பூக்கம்

1. A, C, F  2. A, B, F  3. B, C, D  4. A, D, E

(5) ஆபிரகாம் மாஸ்லோவின் தேவைகளின் படிமுறையமைப்பு ஊக்கல் கொள்கையின்படி தேவைகளை சரியான ஒழுங்கில் உள்ளடக்கிய விடை பின்வருவனவற்றுள் எது?

1. பாதுகாப்பு, அன்பு, உடலியல், கணிப்பு, சுயதிறனடைவு
2. அன்பு, பாதுகாப்பு, உடலியல், கணிப்பு, சுயதிறனடைவு
3. உடலியல், பாதுகாப்பு, கணிப்பு, அன்பு, சுயதிறனடைவு
4. உடலியல், பாதுகாப்பு, அன்பு, கணிப்பு, சுயதிறனடைவு

(6) சிக்மண்ட் புரொயிட்டின் உளப்பகுப்பு அணுகுமுறையின்படி பின்வருவனவற்றுள் எது **அகத்தின்** இயல்பாகும்?

1. யதார்த்தக் கோட்பாட்டுக்கிணங்க தொழற்படுதல்
2. நனவிலித் தூண்டல்களுக்கிணங்க தொழிற்படுதல்
3. பிறப்பின்போதே பெற்றுக்கொள்ளப்படுதல்
4. உடலியல்ரீதியான திருப்திக்கு முதன்மை கொடுத்தல்

(7) பிள்ளையின் சிறு பராயத்தில் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் பிற்கால வாழ்க்கையின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் என்கின்ற கருத்தை முன்வைத்த உளவியலாளர்

1. கார்ள் ரொஜேர்ஸ்
2. அல்பேட் பண்டுரா
3. எரிக் எரிக்சன்
4. சிக்மண்ட் புரொயிட்

(8) தனியாள் ஆளுமை பற்றிய கொள்கைகளுள் சுய எண்ணக்கரு விருத்தி பற்றி முன்வைத்த உளவியலாளர் யார்?

1. லோரன்ஸ் கோல்பேக்
2. கார்ள் ரொஜேர்ஸ்
3. எரிக் எரிக்சன்
4. கான்ஸ் ஐசன்க்

(9) கவனத்தில் செல்வாக்குச் செலுத்தும் பின்வரும் காரணிகளுள் புறவயக் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?

1. செறிவு, புதுமை, ஊக்கல், நாட்டம்
2. நாட்டம், தூண்டியின் அமைவிடம், முரண்பாடு
3. புதுமை, முரண்பாடு, இயக்கம், செறிவு
4. முன்னனுபவம், நாட்டம், களைப்பு, ஊக்கல்

(10) பாடசாலை மண்டபம் ஒன்றில் பிரிக்கப்படாத வகுப்பறைகளைக் கொண்ட வகுப்பொன்றில் கற்பிக்கும் குறித்த ஆசிரியர் மிகவும் உரத்த குரலில் கற்பிக்கும்போது ஏனைய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இவ்விரைச்சல் தடங்கலாக இருப்பின் இதற்குப் பிரதான காரணம் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?

1. உரத்த குரலால் ஏனைய வகுப்புகளிலுள்ள மாணவர்களின் கவனம் சிதறுதல்
2. உரத்த குரலால் மாணவர் கவனத்தைப் பெறலாம் என அவ் ஆசிரியர் கருதுதல்
3. உரத்த குரலில் பேசும்போது குறித்த வகுப்பு மாணவர்களின் கவனம் சிதறாது
4. மண்டபத்திலுள்ள வகுப்புகள் வேறாக்கப்படாததால் மாணவர்களின் கவனம் சிதறுதல்

(11) ஒரு ஆசிரியர் மொழிப் பாடத்தில் எண்ணக்கருவைக் கற்பிக்கும்போது அதற்கான உதாரணத்தை கரும்பலகையில் எழுதி பின்னர் அதனை அடிக்கோடிட்டுக் காட்டினார் எனில் பின்வருவனவற்றுள் எந்த புலக்காட்சி விதிக்கு இச் செயல் பொருத்தமானது?

1. உருவமும் பின்னணியும்
2. பருமன் மாறாத்தன்மை
3. வேறு தூண்டிகளின் பிரசன்னம்
4. திரிபுக் புலக்காட்சி

(12) பின்வருவனவற்றுள் எது ஞாபகத்தின் மூன்று வகைகளையும் ஒழுங்குமுறையில் குறித்துக் காட்டுகின்றது?

1. புலனுணர்வு ஞாபகம், சேமித்தல், மீட்டெடுத்தல்
2. புலனுணர்வு ஞாபகம், குறுங்கால் ஞாபகம், நினைவில் நிறுத்துதல்
3. புலனுணர்வு ஞாபகம், குறுங்கால் ஞாபகம், நீண்ட கால ஞாபகம்
4. புலனுணர்வு ஞாகபம், குறுங்கால ஞாபகம், மீட்டெடுத்தல்

(13) குறித்த வகுப்பொன்றில் ஆசிரியர் 'நதி' என்ற எண்ணக்கருவைக் கற்பிக்கையில் பல்வேறு நீர்நிலைகளையும் உதாரணங்காட்டி கற்பித்தார் எனில், எண்ணக்கருவாக்கச் செயன்முறையில் பின்வரும் எந்தச் செயன்முறை இங்கு இடம்பெறுகிறது?

1. ஒழுங்கமைத்தல்
2. பண்புபிரித்தறிதல்
3. பொதுமையாக்குதல்
4. வகைப்படுத்துதல்

(14) பின்வருவன ஞாபகம் மற்றும் மறத்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியதாகும்.

A. கருத்தற்ற விதத்தில் மனனம் செய்தல்
B. கற்ற விடயங்களை பயிற்சி செய்தல்
C. இடையீடு செய்யும் கற்றல் அனுபவம்
D. மிகை கற்றல்
E. தொகை கற்றல்
F. கற்கும் விடயம் அமைப்பாக்கப்பட்டிருத்தல்
G. அடிக்கடி மீட்டறிதல்
H. ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் அனுபவம்

இவற்றுள் மறத்தல் நிகழுவதற்கு காரணமாக அமைவன

1. A, C, E 2. B, G, H 3. C, E, F 4. A, E, H

(15) லேவ் விகொட்ஸ்கியின் சமூக கட்டுருவாக்ச் சிந்தனையின்படி மாணவர் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் **பிரதான காரணி** பின்வருவனவற்றுள் எது?

1. நனவிலி மனதின் விசை
2. தூண்டி துலங்கல் இணைப்பு
3. அறிவுடையவர்களின் அருகாமை
4. அகக்காட்சி உருவாக்கம்

(16) தொழிலி நிபந்தனைப்பாட்டுக் கற்றலின்படி பின்வருவனவற்றுள் **சரியானது** எது?

1. இயற்கைத் தூண்டி நிபந்தனைப்பாட்டு தூண்டியாதல்
2. தொடர்ச்சியான நிபந்தனைப்பாட்டு தூண்டிக்கு துலங்கல் அழிதல்
3. நிபந்தனைப்பாட்டு துலங்கல் இச்சையின்றி வெளிப்படல்
4. நடத்தை நிபந்தனைப்பாட்டுக்கு மீளவலியுறுத்தல் வழங்குதல்

(17) கற்றல் தொடர்பான பின்வரும் கூற்றுகளை வாசிக்குக.

A. இச்சையின்றிய நடத்தையானது மீளவலியுறுத்தலால் உறுதியடைதல்
B. தனியாள் சூழலுடனான இடைவினைத்தொடர்பினூடாக கற்றல் இடம்பெறல்.
C. கற்றலானது வாழ்நாள் முழுதும் நீண்டு நிலைத்திருக்கும் நடத்தை மாற்றமாகும்.
D. தனியாளின் பரம்பரை மற்றும் சூழல் காரணிகள் கற்றலில் செல்வாக்கு செலுத்தும்.
E. தனியாளின் நடத்தை மாற்றங்கள் பரம்பரையலகில் நிரலித்ததற்கேற்ப முன்னரே தீர்மானிக்கப்பட்டவாறு நடைபெறுதல்
F. சூழலுடனான இடைவினைத்தொடர்பின் மூலம் அனுபவத்திரளமைப்பு கட்டுருவாதல்

இவற்றுள் கற்றல் பற்றிய சரியான கூற்றுகளை உள்ளடக்கிய விடை எது?

1. A, B, F  2. B, D, F  3. B, C, E  4. A, C, D

(18) ஒரு சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொண்ட கற்றலானது வாழ்க்கைக் காலம் முழுதும் பயன்படும் விதமாக இடம்பெறும் கற்றல் இடமாற்றமானது பின்வரும் எந்தக் கொள்கைக்கு ஏற்புடையது?

1. மண்டல அறிதற் கொள்கை
2. ஒத்த மூலகக் கொள்கை
3. பொதுமையாக்கற் கொள்கை
4. இலட்சியவாதக் கொள்கை

(19) பிரச்சினை தீர்த்தலில் படிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- பிரச்சினை தொடர்பாக விரிசிந்தனை தோன்றுதல்
- பிரச்சினை தீர்ப்பதற்கான ஊக்கல்
- பிரச்சினைக்கு அவசியமான தரவு சேகரித்தல்
- பிரச்சினைக்கான கருதுகோளினை அமைத்தல்
- பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளுதல்

மேற்படி படிமுறைகளைக் கொண்ட பிரச்சினை தீர்த்தல் முறை பின்வருவனவற்றுள் எது?

1. விஞ்ஞானரீதியான சிந்தனை
2. அனாவரண முறை
3. உள்ளுணர்வு முறை
4. முயன்று தவறுதல் முறை

(20) ஹாவார்ட் காட்னரின் பல்நிலை நுண்மதிக் கொள்கையின்படி பின்வருவனவற்றுள் எந்த விடை இந்த நுண்மதி வகைகளைக் கொண்டுள்ளது?

A. மொழிசார் நுண்மதி
B. கலாசார நுண்மதி
C. ஆளிடை நுண்மதி
D. புரிந்துணர்வு நுண்மதி
E. அறிவியல்சார் நுண்மதி
F. அழகியல்சார் நுண்மதி
G. தர்க்கரீதியான நுண்மதி
H. அகநோக்கு நுண்மதி

1. A, B, F　　2. A, C, G　　3. C, E, G　　4. A, G, H